# அவசரக் கூட்டம்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியின் அவசரக்கூட்டம் **25.10.2021** ஆம் தேதி திங்கட்கிழமை பகல் **11.00** மணியளவில் நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்கண்ட கூட்டப்பொருள் நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
நாள். **23.10.2021**

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்.

**பொருள் எண் –01**

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தி அமைத்துருவாக்குதல் தொடர்பாக அரசு உத்தேச முடிவெடுத்து 11.09.2021 அன்றுஅரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆறு வார காலம் அவகாசம் 23.10.2021 அன்றுடன் முடிவுற்ற நிலையில் பொதுமக்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோரிடமிருந்து இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் தரம் உயர்த்துதல் தொடர்பாக எந்தவித ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் வரப்பெறவில்லை என்பதால், 4 – ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன் படிசோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியை, தரம் உயர்த்தி நகராட்சியாக அறிவிக்கப்பட்ட உத்தேச முடிவு ஆணை குறித்து, இறுதி செய்வதற்கு சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி தனி அலுவலரின் அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலகக் குறிப்பு**

அரசாணை (நிலை) எண் 67, நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 11.09.2021–ல் சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியை தரம் உயர்த்தி நகராட்சியாக அமைத்துருவாக்கி உத்தேச ஆணை பிறப்பிக்கப்பட்டு, அரசிதழ் வெளியிடப்பட்டது. இது குறித்து அரசு அலுவலகங்கள், பொது மக்கள் மத்தியில் ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் கோரப்பட்டதில் எவ்வித ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் பெறப்படவில்லை என்பதால், பேரூராட்சி மன்ற தனி அலுவலர்,சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியை தரம் உயர்த்தி நகராட்சியாக இறுதியாணை பிறப்பிக்க பரிந்துரை செய்யலாம்.

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்

# சாதாரணக் கூட்டம்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியின் சாதாரணக்கூட்டம் **29.10.2021** ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் மணியளவில் நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்கண்ட கூட்டப்பொருள்கள் நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
நாள். **25.10.2021**

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்.

<u>பொருள் எண்: **01**</u>

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் செப்டம்பர்–2021 மாதம் வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பதிவு செய்தது தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| செப்டம்பர்– 2021 | **8** | **8** | **16** | **8** | **8** | **16** | **0** | **0** | **0** |

<u>பொருள் எண்.02</u>

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் கடிகாசலம் என்ற புராணப்பெயருடைய சோள சிம்மபுரம் வைணவ ஸ்தலங்களில் **108**–ல் ஒன்றாகும். இது தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்திற்கும் திருவேங்கடமலைக்கும் இடையிலுள்ள திவ்விஷோத்ரமாகும். இவ்வூர் திருக்கடிகை எனும் வைணவத் திருத்தலம் ஆகும். ஆழ்வார்களால் பாடல் பெற்ற திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும், சோளிங்கர் **3** கிலோ மீட்டர் தெற்கில் கொண்டபாளையம் எனும் சிறு கிராமம் உள்ளது. அங்கு பெரிய, சிறிய மலைகள் உள்ளது. பெரிய மலையில் ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமிகள் மற்றும் தாயார் அம்மாவும், சிறிய மலையில் ஸ்ரீ யோக ஆஞ்சிநேயர் சுவாமி திருக்கோயிலும் உள்ளது. இத்திருக்கோயிலில் கார்த்திகை திருவிழா (கார்த்திகை மாதத்தில் ஒவ்வொரு வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில்) நடைபெறும். அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் கார்த்திகை திருவிழா நாள். **19.11.2021 To 19.12.2021** வரை நடைபெறவுள்ளது. இதில் தற்காலிக கடைகள் மற்றும் வந்து செல்லும் வாகனங்களுக்கு சுங்கம் வசூலிக்க ஏலம் விட தனி அலுவலரின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கு வைத்தல்.

<u>செயல் அலுவலர் குறிப்பு</u>

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக **(COVID-19)** லாக்டவுன் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் வெளியூர் மற்றும் உள்ளூர் பொது மக்கள் குறைந்த அளவே வருவதால். தற்காலிக கடைகள் மற்றும் வந்து செல்லும் வாகனங்கள் அதிகமாக வர வாய்ப்பில்லை. இதனால் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் கார்த்திகை திருவிழா ஏலம் குறைந்த அளவில் கேட்க வாய்ப்பு உள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனி அலுவலரின் தகவலுக்கு வைத்தல்.

<u>பொருள் எண். 03</u>

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் 17.02.2021 ஆம் தேதியில் 2021 –2022 முதல் 2023–2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு இறைச்சி மார்கெட் கடைகள் குத்தகை விடப்பட்டது. அதில் கீழ்கண்ட கடைகள் மட்டும் ஏலம் கோர எவரும் கலந்துக்கொள்ளவில்லை பேரூராட்சியின் தனி அலுவலர் அவர்கள் தீர்மான எண்.93 ,நாள்.19.02.2021 –ல் ஏலம் கோராத கடைகளுக்கு மறு ஏலம் விட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் கீழ்கண்ட இறைச்சி மார்கெட் கடைகளுக்கு 25.08.2021 ஆம் தேதியில் மறு ஏலம் விடப்பட்டதில் ஏலம் கேட்க எவரும் வரவில்லை, மேலும் 13.09.2021 ஆம் தேதியில் மறு ஏலம் விடப்பட்டதில்

கடை எண்.9 2020–2021 –ஆம் ஆண்டில் உள்ள மாத ஏலத்தொகை ரூ.1187/– தற்போது ஏலம் ரூ.1250/–

கடை எண்.13 2020–2021 –ஆம் ஆண்டில் உள்ள மாத ஏலத்தொகை ரூ.1035/– தற்போது ஏலம் ரூ.1150/– மட்டும் ஏலம் விடப்பட்டது.

<u>செயல் அலுவலர் குறிப்பு</u>

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி, இறைச்சி மார்கெட் கடை எண்.8,14,15,16,17 கடைகள் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் ஏலம் கேட்க எவரும் வரவில்லை, பழுதடைந்துள்ள கடைகளின் கட்டிடங்களை சோளிங்கர் பேரூராட்சி , இளநிலை பொறியாளர் அவர்களிடம் சான்று பெறப்பட்டுள்ளது. தனி அலுவலரின் தகவலுக்கு வைத்தல்.

<u>பொருள் எண். 04</u>

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் செப்டம்பர்–2021 மாத வரவுகள் தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்.

| வ. எண் | வரி இனங்கள் விவரம் | செப்டம்பர்– 2021 |
|---|---|---|
| 1 | சொத்து வரி நிலுவை வசூல் | 110934 |
| 2 | சொத்து வரி நடப்பு வசூல் | 758637 |
| 3 | நூலக வரி நிலுவை வசூல் | 10396 |
| 4 | நூலக வரி நடப்பு வசூல் | 75999 |
| 5 | தொழில் வரி வசூல் | 1686660 |
| 6 | குடிநீர் கட்டணம் நிலுவை வசூல் | 48120 |
| 7 | குடிநீர் கட்டணம் நடப்பு வசூல் | 178720 |
| 8 | பல வகை பட்ட கட்டணம் நிலுவை வசூல் | 25000 |
| 9 | பல வகை பட்ட கட்டணம் நடப்பு வசூல் | 115900 |
| 10 | இதர வரவினங்கள் | 1055551 |

<u>பொருள் எண்.05</u>

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் செப்டம்பர்–2021 மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். 504 முதல் 582 வரை தனி அலுவலர் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

<u>பொருள் எண்.06</u>

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி பொது மக்களுக்கு பொன்னை ஆற்றில் இருந்தும், சோளிங்கர் ஏரியில் இருந்தும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொன்னை ஆற்றில் வெள்ள பெருக்கெடுத்து ஓடுவதால் பைப் லைன் மற்றும் கேபிள் பழுதடைந்து மின் மோட்டார் இயக்க முடியமால் உள்ளது. மேலும் சோளிங்கர் ஏரியில் எற்கனவே உள்ள 6 போர்வெல் மற்றும் திறந்த வெளி கிணறு தண்ணீரில் மூழ்கி மின் மோட்டார் இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பேரூராட்சி பொது மக்களுக்கு அன்றாட தேவையான குடிநீர் வழங்க இயலவில்லை. பொது மக்கள் தினந்தோறும் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. பொது மக்களின் குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு 5 இடங்களில் புதியதாக போர்வெல் அமைத்து அதில் மின்மோட்டார் பொருத்தி ஏற்கனவே உள்ள குடிநீர் பைப் லைனில் இணைப்பு செய்ய மதிப்பீடு பெற்று உடனடியாக பணி மேற்கொள்ள பேரூராட்சி மன்ற தனி அலுவலர் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைத்தல்

செயல் அலுவலர்
சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
ராணிப்பேட்டை மாவட்டம்

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்